புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்

38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.

No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 98 | 13-10-2026 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 02 | Issue: 98 | 13-10-2026 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## டெல்லி ஜந்தர் மந்தரில் இனி போராட்டம் நடத்த அனுமதி இல்லை!

புது டெல்லி: அக்.13

ஜந்தர் மந்தரில் இனி போராட்டங்கள் நடத்தக் கூடாது என்று டெல்லி காவல் துறை அறிவித்துள்ளது. அதே நேரத்தில் போராட்டங்களை நடத்துவதற்கு மூன்று புதிய இடங்களின் பட்டியலையும் காவல் துறை வெளியிட்டுள்ளது.

டெல்லியில் தற்போதுள்ள போராட்ட இடத்துக்கு மாற்றாக, போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கான தகுந்த இடங்களை ஆராய உள்துறை அமைச்சகம் ஒரு குழுவை அமைத்திருந்ததாக டெல்லி காவல் துறை வெளியிட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஜந்தர் மந்தர் போராட்டம் நடத்தும் இடமாக அறிவிக்கப்பட்டிருந்தது ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அந்தச் சுற்றறிக்கை, மூன்று புதிய இடங்களையும் பட்டியலிட்டுள்ளது.

அதன்படி ராம்லீலா மைதானம், புராடி மைதானம் மற்றும் சிபிடி மைதானம் ஆகியவை போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கான புதிய இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## மதுராந்தகம், தாராபுரம் எம்எல்ஏக்கள் பதவியேற்பு: தவெக பலம் 109 ஆக உயர்வு



சென்னை: அக்.13=

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற தவெக எம்எல்ஏக்கள் நேற்று சபாநாயகர் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர்.

நடந்து முடிந்த மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் போட்டியிட்ட தவெக வேட்பாளர்களான மரகதம் குமரவேல், சத்தியபாமா ஆகியோர் வெற்றிபெற்றனர். இரு தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் முடிவுகள் கடந்த அக். 9ம் தேதி வெளியானது.

இதனை தொடர்ந்து சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று மதுராந்தகம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினராக மரகதம் குமரவேல், தாராபுரம் எம்எல்ஏவாக சத்தியபாமா ஆகியோர் சபாநாயகர் ஜேசிடி பிரபாகர், முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர். தவெக எம்எல்ஏக்களாக இருவரும் பதவியேற்றுக் கொண்ட நிகழ்வின்போது, அமைச்சர்கள் ஆனந்த், செங்கோட்டையன், அருண்ராஜ், ராஜ்மோகன் ஆகியோர் உடன் இருந்தனர். இவர்கள் இருவரும் எம்எல்ஏக்களாக பதவியேற்றுக் கொண்டதால் தமிழக சட்டப்பேரவையில் தவெகவின் பலம் 109 ஆக அதிகரித்துள்ளது.

### இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற எம்.எல்.ஏக்கள் முதல்அமைச்சரிடம் வாழ்த்து...



சென்னை தலைமைச் செயலகத்தில் சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் முன்னிலையில் இன்று, மதுராந்தகம் இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற மரகதம் குமரவேல், தாராபுரம் இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற சத்தியபாமா ஆகியோர் சட்டமன்ற உறுப்பினராக உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.. பதவியேற்பின் போது அமைச்சர்கள் என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, அருண்ராஜ், கே.ஏ. செங்கோட்டையன், சி.டி.ஆர். நிர்மல் குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்..முதல் அமைச்சரிடம் வாழ்த்துஇதையடுத்து இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற எம்.எல்.ஏக்கள் மரகதம் குமரவேல், சத்தியபாமா இருவரும் முதல் அமைச்சர் விஜய்யை சென்னை தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்தனர். அவருக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்து பெற்றனர்."

## "தவெக அணிக்குள் பாமக வந்தால் விசிக வெளியேறும்" அமைச்சர் வன்னி அரசு உறுதி



திண்டிவனம்: அக்.13–

"சாதியவாத பாமக, மதவாத பாஜகவோடு விசிக ஒருபோதும் கூட்டணி இல்லை என திருமாவளவன் சொல்லியுள்ளார். எனவே, பாமக உள்ளே வந்தால், நாங்கள் வெளியே செல்வோம்" என அமைச்சர் வன்னி அரசு தெரிவித்துள்ளார்.

திண்டிவனத்தில் (அக்.11) நடந்த தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டின் தீர்மான விளக்கப் பொதுக் கூட்டத்தில் பேசிய அமைச்சர் வன்னி அரசு, "இந்தப் பதவி இருக்கும், இல்லாமல் போகும். எனக்கு அமைச்சர் பதவியை விட திருமாவளவன்தான் முக்கியம். விசிகதான் முக்கியம். தவெக கூட்டணிக்கு உள்ளே பாமக வந்தால் உங்கள் நிலை என்ன என்று பலரும் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். 10 ஆண்டுகளாக அதற்கு பதில் சொல்லி வாயும் வலிக்கிறது, கேட்டுக் கேட்டு காதும் வலிக்கிறது.

சாதியவாத பாமக, மதவாத பாஜகவோடு விசிக ஒரு போதும் கூட்டணி இல்லை என திருமாவளவன் சொல்லியுள்ளார். எனவே, பாமக உள்ளே வந்தால், நாங்கள் வெளியே செல்வோம் என்பதுதான் அதனுடைய பிரகடனம். எங்களுக்கு பதவி முக்கியம் இல்லை. திருமாவளவன் கட்டளையிடும் பணியை செய்ய அடிமட்ட தொண்டராக இருந்து களமாடுகிறோம்.

விசிக தேர்தல் புறக்கணிப்பு பாதையில் நின்ற இயக்கம். எங்களுக்கு தேர்தல்கள் முக்கியமில்லை. அதிமுக, திமுக போல விசிக சராசரி கட்சி இல்லை. இது விடுதலை இயக்கம்" என்றார் அமைச்சர் வன்னி அரசு.

## பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு 2 பேருக்கு அறிவிப்பு...

ஸ்டாக்ஹோம், அக்.13–

பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு 2 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. .நோபல் பரிசுஉலக அளவில் மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம், அமைதி ஆகிய துறைகளில் மகத்தான சாதனை படைப்பவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது. .ஸ்வீடன் நாட்டின் தலைநகர் ஸ்டாக்ஹோமில் நோபல் சபை நோபல் பரிசுகளை அறிவித்து வருகிறது. அந்த வகையில் 2026ம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் அறிவிக்கும் நிகழ்வு கடந்த 5ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி ஆகிய 5 துறைகளுக்கான நோபல் பரிசுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன. .பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு இந்நிலையில், பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவை சேர்ந்த பொருளாதார நிபுணர்கள் ராபர்ட் ஹால், மைக்கேல் வுட்போர்டு ஆகிய இருவருக்கும் பொருளாதாரத் திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட் டுள்ளது. .பொருளாதார அதிர்ச்சிகளை அரசுகள், மத்திய வங்கிகள் சமாளிப்பதற்கான நெறிமுறைகளை வகுத்ததற்காக ராபர்ட் ஹால், மைக்கேல் வுட்போர்டு ஆகியோருக்கு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது."

## அரிசி, பருப்பு விலை உயர்வால் மக்கள் கடுமையாக பாதிப்பு: அன்புமணி ராமதாஸ் கண்டனம்



சென்னை: அக்.13–

அரிசி, பருப்பு விலை உயர்வால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அலட்சியம் காட்டாமல் அரசு உடனடியாக நடவடிகை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்;

தமிழ்நாட்டில் அரிசி விலை நாளுக்கு நாள் அதிகரித்து, அன்றாட பயன்பாட்டுக்கான அரிசியே கிலோ ரூ.77 என்ற உச்சத்தை அடைந்திருக்கிறது. கடந்த ஜூலை மாதம் முதல் இப்போது வரையிலான 3 மாதங்களில் அரிசி விலை கிலோவுக்கு ரூ.27 வரையிலும், 26 கிலோ மூட்டை ரூ.700 வரையிலும் உயர்ந்திருக்கும் நிலையில், அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல், அரிசி விலை உயரவே இல்லை என்று உணவுத்துறை அமைச்சர் கூறி வருவது கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் கடந்த ஜூலை மாதம் ரூ.1100 ஆக இருந்த 26 கிலோ எடை கொண்ட சாதாரண ரக புழுங்கல் அரிசி மூட்டை விலை இப்போது ரூ.1800 ஆக உயர்ந்திருக்கிறது. அதாவது இந்த வகை அரிசியின் விலை கிலோ ரூ.42 லிருந்து ரூ.70 ஆக அதிகரித்திருக்கிறது. அதேபோல், பொன்னி புழுங்கல் அரிசி மூட்டை விலை ரூ.1400லிருந்து ரூ.1900 ஆகவும், ஆந்திரா மற்றும் கர்நாடகத்திலிருந்து வரும் சோனா மசூரி அரிசி மூட்டை விலை ரூ.1400லிருந்து ரூ.2000 ஆகவும் அதிகரித்திருக்கிறது.

அதேபோல், விருதுநகர் மொத்த விற்பனை சந்தையில் துவரம் பருப்பு 100 கிலோ மூட்டை விலை ரூ.13,200 லிருந்து ரூ.600 உயர்ந்து ரூ.13,800 ஆக அதிகரித்துள்ளது. நயம் உளுந்தம்பருப்பு 100 கிலோ மூட்டை கடந்த வாரம் ரூ.9,100 முதல் ரூ.9,200 வரை விற்கப்பட்ட நிலையில் இந்த வாரம் மூட்டைக்கு ரூ.1,100 உயர்ந்து, ரூ.10,200 முதல் ரூ.10,400 வரை விற்பனை செய்யப்படுகிறது.

சில்லறை விலையில் ஒரு கிலோ அரிசி ரூ.27 வரையிலும், துவரம் பருப்பு கிலோவுக்கு ரூ.6, உளுத்தம்பருப்பு ரூ.11 வீதமும் உயர்ந்துள்ள நிலையில், அதனால் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மக்களை பாதிக்கும் அரிசி விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த ஜூலை 22 ஆம் தேதியும், செப்டம்பர் 27ஆம் தேதியும் அறிக்கை வெளியிட்டிருந்தேன். ஆனால், அரிசி விலையை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையையும் தமிழக அரசு எடுக்கவில்லை.

மாறாக, அரிசி உள்ளிட்ட 11 அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை கண்காணித்து வருகிறோம்; அரிசி விலை உயரவே இல்லை; இது எதிர்க்கட்சிகளால் கட்டமைக்கப்படும் பொய்யான பிம்பம் தான் உணவுத்துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார். அர்சி விலை கிலோவுக்கு ரூ.27 வரை உயர்ந்திருப்பதால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அரிசி விலையே உயரவில்லை என்று கூறுவது மிகவும் ஆபத்தானது. இத்தகைய அலட்சியப் போக்கை கைவிட்டு, அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களில் விலைகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மணப்பாறை தொகுதியில் மூன்றாவது நாளாக வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்த எம்.எல்.ஏ. ரா. கதிரவன்!

### கிராமங்கள் தோறும் நேரில் சந்திப்பு ; அடிப்படை வசதிகள் கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்





மணப்பாறை:, அக்.13–

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சட்டமன்றத் தொகுதியில் 2026ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் விசில் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ரா. கதிரவன், தனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு தொடர்ந்து மூன்றாவது நாளாக நேரில் சென்று நன்றி தெரிவித்து வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக, மருங்காபுரி ஒன்றியத்தின் பல்வேறு கிராமங்களில் காலை மற்றும் மாலை என இரு வேளைகளிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவர், 500க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

அப்போது, கிராம மக்கள் தங்களது பகுதிகளில் நிலவும் அடிப்படை வசதிகள் தொடர்பான கோரிக்கைகளை சட்டமன்ற உறுப்பினரிடம் முன்வைத்தனர். குறிப்பாக, சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் கால்வாய் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பொதுமக்கள் நலன் சார்ந்த கோரிக்கைகளை அவர் கேட்டறிந்தார்.

மக்களின் கோரிக்கைகளைக் கனிவுடன் கேட்டறிந்த சட்ட மன்ற உறுப்பினர் ரா. கதிரவன், சம்பந்தப்பட்ட துறை அதிகாரி களை உடனடியாகத் தொடர்பு கொண்டு, பொதுமக்களின் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

கிராமங்கள் தோறும் உற்சாக வரவேற்பு!

சட்டமன்ற உறுப்பினர் கிராமங்களுக்கு வருகை தரும்போது, பொதுமக்கள் ஆரத்தி எடுத்து, பட்டாசு வெடித்து, இனிப்புகள் வழங்கி உற்சாகமாக வரவேற்பு அளித்து வருகின்றனர். அவரைத் தங்கள் வீட்டு பிள்ளையாகக் கருதி மக்கள் அன்புடன் வரவேற்பதாக அப்பகுதியில் நிகழ்ந்த வரவேற்பு நிகழ்வுகள் தெரிவிக்கின்றன.

பொதுமக்களைச் சந்தித்துப் பேசிய ரா. கதிரவன், தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதி களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தொடர்ந்து கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

அவரது உரையின்போது, பொதுமக்கள் ஆரவாரம் செய்து வரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து கிராமங்கள் தோறும் நேரில் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன், அப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தி வருவது இந்தச் சுற்றுப்பயணத்தின் முக்கிய அம்சமாக அமைந்துள்ளது.

## ஈரோடு மாநகராட்சி திட்டப் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம்..

# கைத்தறித்துறை அமைச்சர் விஜய் பாலாஜி கலந்துகொண்டு அதிகாரிகளுடன் ஆலோசனை..

## தூய்மை பணியாளர்களுக்கு பணி உபகரணங்கள் வழங்கினார்..



ஈரோடு. அக். 13

ஈரோடு மாநகராட்சியில் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அதிகாரிகளுடன் அமைச்சர் விஜய் பாலாஜி நேற்று ஆலோசனை நடத்தினார்.

ஈரோடு மாநகராட்சியில் 60 வார்டுகள் உள்ளன. இங்கு பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஊராட்சி கோட்டை கூட்டுக் குடிநீர் திட்டம், பாதாள சாக்கடை திட்டம், குப்பை கழிவுகள் தூய்மை ப்படுத்தும் திட்டம் என பல்வேறு திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டப் பணிகள் குறித்து அதிகாரிகளோடான ஆலோசனைக் கூட்டம் நேற்று மாநகராட்சி ஆலோசனை கூட்ட அரங்கத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட தமிழக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் விஜய பாலாஜி, மாநகராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் திட்ட பணிகள் குறித்து ஆய்வு செய்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் தூய்மை பணியாளர்களுக்கு அவர் தூய்மை பணிக்கான உபகரணங்களை வழங்கினார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் விஜய் பாலாஜி, செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தார். அப்பொழுது அவர் தெரிவித்ததாவது.. இன்று ஈரோடு மாநகராட்சியில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு செய்து ஆலோசனை நடத்தப்பட்டது.

மேலும் ஈரோடு மாநகராட்சியில் குடிநீர், சாலை கட்டமைப்பு, பாதாள சாக்கடை திட்டம், தூய்மை பணிகள் திட்டம் ஆகியவற்றை குறித்து ஆய்வு செய்யப்பட்டு ஆலோசனை என்பது நடைபெற்றது.

வரும் பொங்கலுக்குள் இலவச வேட்டி சேலை முழு அளவில் தயார் செய்யப்பட்டு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ரேஷன் கடைகள் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட உள்ளது. இவ்வாறு அமைச்சர் விஜய் பாலாஜி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஆலோசனைக் கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் அரபித் ஜெயின், மாநகர சுகாதார நல அலுவலர் கௌரி சரவணன், கவுன்சிலர்கள் சபுராமா தங்கமுத்து, மாநகராட்சி பொறியாளர், உதவி ஆணையாளர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கோவை அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்குத் தங்க மோதிரம் வழங்கி வாழ்த்திய கனிமொழி எம்எல்ஏ



கோவை, அக்.13–

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்'தாய் மாமன் தங்க மோதிரம்'திட்டத்தின் கீழ் பிறந்த குழந்தைகளுக்குத் தங்க மோதிரங்களை வழங்கி, ஆர்.டி. கனிமொழி வாழ்த்தினார்.

இந்நிகழ்வில்,புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்குத் தங்க மோதிரங்களை வழங்கிய ஆர்.டி.கனிமொழி, குழந்தைகள் ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வளர வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

குழந்தைகளின் பிறப்பைக் கொண்டாடும் வகையிலும், குடும்பங்களின் மகிழ்ச்சியை அதிகரிக்கும் வகையிலும் இத்தகைய திட்டங்கள் அமைகின்றன. இத்திட்டத்தைச் செயல்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சருக்கு தனது நன்றியையும் ஆர்.டி.கனிமொழி தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வின்போது,கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் (டீன்) டாக்டர் கீதாஞ்சலி உடனிருந்தார். மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் போதைப்பொருள் எதிர்ப்பு மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான போதைப்பொருள் விழிப்புணர்வு தொடர்பான கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி கிரண் ஸ்ருதி உட்பட பலர் உள்ளனர்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து, பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் குமார்.ரா ஆய்வு



திருவள்ளூர் அக் 13 :

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் குமார்.ரா, மாவட்ட ஆட்சியர் ச.கவிதா முன்னிலையில் தனியார் மருந்து தொழிற்சாலை சார்பில் பெருநிறுவன சமூகப் பங்களிப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் 24 மின்கல இயக்க வாகனங்களை ஊராட்சிகளுக்கு வழங்கி, கீழ்முதலம்பேடு ஊராட்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.6.42 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து புதுவாயல் பகுதி ஆரணியாற்று கரையோரப்பகுதியில் நீர்வளத் துறை சார்பில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பருவமழை முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கையாக கரை பகுதியை தூர்வாரி பலப்படுத்தும் பணிகள் தொடர்பாக நேரில் ஆய்வு மேற்கொண்டு, பொன்னேரி பழைய வட்டாட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.19.47 இலட்சம் மதிப்பீட்டில் கோட்ட அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தினை திறந்து வைத்தார்.

திருப்பாச்சூர் தனியார் பொறியியல் கல்லூரியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் (ம) தமிழ்நாடு மாநில ஊரக, நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை தொடங்கி வைத்து பணி நியமன ஆணைகளை அமைச்சர் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள விளையாட்டு அரங்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ரூ.1.63 கோடி மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பாரா உள் விளையாட்டு அரங்கம் மற்றும் பாக்ஸ் கிரிக்கெட் வலை பயிற்சி மையத்தை செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர், மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் திறந்து வைத்து, பார்வையிட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலக பல்நோக்கு கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கையாக அனைத்து துறை அலுவலர் களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் டி.அருண்குமார் (திருவள்ளூர்), ஆர்.பிரகாசம் (பூவிருந்தவல்லி), எம்.எஸ்.ரவி (பொன்னேரி), மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.ராஜ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான (பொ) கவிதா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள் (ம) தணிக்கை (கிழக்கு)) பஞ்சு, துணை ஆட்சியர் (பயிற்சி) ச.சபரி கிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தனியார் மருந்து தொழிற்சாலை நிறுவன பிரதிநிதிகள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குமார், ஆரணியாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் கார்த்திகேயன், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய உதவி இயக்குநர் க. விஜயா, மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர் அருள்போஸ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கலியன், வட்டாட்சியர்கள் ஜெய்கர்பிரபு (பொன்னேரி), பாலாஜி (கும்மிடிப்பூண்டி), சரண்யா (திருவள்ளூர்) மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சேலத்தில் வெள்ளி குடோனுக்குள் புகுந்து சிசிடிவி'க்கு ஸ்பிரே அடித்து 600 கிலோ வெள்ளி கொள்ளை 14 கோடி காலி.



சேலம்.அக்.13=

சேலத்தில் வெள்ளிக் கொலுசு தயாரிக்கும் தொழில் என்பது மிகவும் பிரபலம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இதை நோட்டமிட்டே 600 கிலோ வெள்ளிப் பொருட்கள் ஒரே இரவில் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதுதான் இப்போது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ரூ.14 கோடி மதிப்புள்ள வெள்ளிப் பொருட்களைக் குறிவைத்து, காரில் வந்த 4 பேர் கொண்ட கும்பல் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளது. செக்யூரிட்டியை தாக்கிக் கட்டிப்போட்டதுடன், சிசிடிவி கேமராக்களையும் ஸ்பிரே அடித்து மறைத்துவிட்டுத் தப்பியிருக்கிறது இந்தக் கும்பல்..

சேலம் மாவட்டம் என்றாலே வெள்ளிக் கொலுசுகள்தான் பலருக்கும் நினைவுக்கு வரும்.. இங்கு தயாரிக்கப்படும் வெள்ளிப் பொருட்கள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு மட்டுமல்லாமல் , வெளிமாநிலங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. அந்த அளவுக்கு இங்கு வெள்ளித் தொழில் பிரபலமாக உள்ளது.

சேலம் வெள்ளி பட்டறை

இந்த தொழிலில் கடந்த 40 வருடங்களாக ஈடுபட்டு வருபவர் பாலசுப்பிரமணியம். சேலம் சினிமா நகர் பகுதியில் இவருக்குச் சொந்தமான வெள்ளிப் பொருட்கள் குடோன் உள்ளது. வெள்ளிக் கட்டிகளை வாங்கி, அவற்றைக் கொலுசு, மெட்டி, அரைஞாண் கொடி, காப்பு உள்ளிட்ட பல்வேறு பொருட்களாகத் தயாரித்து மொத்த விற்பனை செய்து வருகிறார்.

சில இடங்களுக்கு வெள்ளிக் கட்டிகளை அனுப்பி, அங்கு கொலுசுகளைத் தயாரித்து வாங்கும் வகையிலும் இவரது தொழில் நடைபெற்று வருகிறது. இப்படி தயாராகும் வெள்ளிப் பொருட்களை விற்பனைக்காக குடோனில் இருப்பு வைப்பது வழக்கம்..

நள்ளிரவில் புகுந்த 4 பேர்

நேற்று இரவு வழக்கம்போல் குடோனைப் பூட்டிவிட்டு, நைட் டியூட்டி பணிக்காக வெங்கடேஷ் என்பவரை அங்கு விட்டுச் சென்றுள்ளனர். ஆனால், நள்ளிரவில் காரில் வந்த 4 பேர் கொண்ட கும்பல் அங்கு புகுந்துள்ளது. முகத்தை மறைத்தபடி வந்த அவர்கள், செக்யூரிட்டி வெங்கடேஷைத் தாக்கியதுடன், அவரைக் கட்டிப்போட்டுள்ளனர்.

இதன்பிறகு குடோனுக்குள் புகுந்த அந்தக் கும்பல், அங்கிருந்த வெள்ளிப் பொருட்களை அள்ளிச் சென்றுள்ளது. அதுமட்டுமல்லாமல், அங்கிருந்த சிசிடிவி கேமராக்கள் மீது ஸ்பிரே அடித்து மறைத்துவிட்டுத் தப்பியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

விறுவிறு விசாரணை

காலையில் இந்தக் கொள்ளைச் சம்பவம் குறித்த தகவல் வெளியானதும், வெள்ளித் தொழிலில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. மொத்தம் 600 கிலோ வெள்ளிப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பு சுமார் ரூ.14 கோடி எனக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும், சேலம் மாநகர காவல் ஆணையாளர் ஏ.ஜி. பாபு தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டதுடன், தடயவியல் நிபுணர்களும் ஆய்வு செய்து தடயங்களைச் சேகரித்தனர். குடோனில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா காட்சிகளையும் கைப்பற்றி போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

ரூ.14 கோடி காலி

இதில் முக்கியமாக, மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள சினிமா நகர் பகுதியில் இப்படியொரு பெரிய கொள்ளை நடந்துள்ளது போலீசாரின் கவனத்தை அதிர வைத்துள்ளது.. குடோனில் வெள்ளிப் பொருட்கள் அதிகளவில் இருப்பதை முன்கூட்டியே தெரிந்துகொண்டு கொள்ளையர்கள் வந்தார்களா, ஏற்கனவே அந்தப் பகுதியை நோட்டமிட்டார்களா என்ற கோணத்திலும் விசாரணை நடக்கிறது.

மேலும், இந்தக் கொள்ளையில் வடமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டிருக்கலாமா என்றும் போலீசார் விசாரித்து கொண்டிருக்கிறார்கள்.. கொள்ளையர்களைப் பிடிப்பதற்காகத் தனிப்படை அமைக்கப்பட்டுத் தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.. 600 கிலோ வெள்ளியை அள்ளிச் சென்ற அந்த 4 பேர் யார், அவர்களைப் பிடிக்க போலீசாருக்கு சிசிடிவி காட்சிகள் உதவுமா என்பதுதான் இப்போது முக்கியக் கேள்வியாக உள்ளது.

# திருவள்ளூரில் காதல் திருமணம் செய்து மது போதையில் மனைவி மற்றும் தந்தையை தாக்கிய கணவன் மனைவி கொக்கு மருந்து சாப்பிட்டதை அறிந்த கணவனும் கொக்கு மருந்து சாப்பிட்டு உயிரிழந்த பரிதாபம்



திருவள்ளூர் அக் 13 :

திருவள்ளூர் காக்களூர் ஏரிக்கரை பகுதியைச் சேர்ந்தவர் பாஸ்கர் மகன் யுவராஜ் (29). இவர் அதே பகுதியைச் சேர்ந்த மஞ்சுளா என்பவரை காதலித்து கடந்த 14.2.2025 அன்று திருமணம் செய்துள்ளார். இந்த தம்பதியினருக்கு குழந்தை இல்லை. கூலித் தொழிலாளியான யுவராஜூக்கு குடி பழக்கம் இருப்பதால் தினமும் குடித்து விட்டு வீட்டிற்கு வருவதால் கணவன் மனைவிக்கிடையே அடிக்கடி தகராறு ஏற்படுவதாக கூறப்படுகிறது.

இதே போல் நேற்று முன்தினம் 10 ஆம் தேதி யுவராஜ் குடிபோதையில் வந்ததால் ஆத்திரம் அடைந்த மனைவி மஞ்சுளா தட்டிக் கேட்டுள்ளார். இதனால் கணவன் மனைவிக்கிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது மது போதையில் இருந்த யுவராஜ் தனது தந்தை பாஸ்கர் மற்றும் மனைவி மஞ்சுளா ஆகிய இருவரையும் பலமாக தாக்கியுள்ளார். இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளான மஞ்சுளா கிராமப்புறங்களில் கொக்கு போன்ற பறவைகளைப் பிடிப்பதற்காகவோ அல்லது பயிர்களைப் பாதுகாக்கவோ பயன்படுத்தப்படும் ஒரு உரமான விஷம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்தான கொக்கு மருந்தை எடுத்து குடித்துள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த யுவராஜ் தானும் அந்த கொக்கு மருந்தை எடுத்து குடித்துள்ளார். இதனால் பயந்து போன யுவராஜின் தாய் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்துள்ளார். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று ஆபத்தான நிலையில் மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தனர்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி 12ஆம் தேதி காலை சிகிச்சை பலனின்றி காதல் தம்பதியினரான கண்வன் யுவராஜ் மற்றும் மனைவி மஞ்சுளா ஆகிய இருவரும் உயிரிழந்தனர். இது குறித்து திருவள்ளூர் தாலுகா போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். காதல் திருமணம் திருமணம் ஆகி ஒன்றரை ஆண்டுகளே ஆன நிலையில் கணவன் மனைவி தகராறில் கணவன் மனைவி இருவரும் கொக்கு மருந்து சாப்பிட்டு சிகிச்சை பலனின்றி தம்பதியினர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கோவை ராயல் கேர் மருத்துவமனையில் இதய அவசர சிகிச்சை மருத்துவப் பயிலரங்கம்

கோவை,அக்.13=

கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மற்றும் இந்திய அவசர மருத்துவச்சங்கம் இணைந்து இதய அவசர சிகிச்சை குறித்த பயிலரங்கம் மற்றும் தொடர் மருத்துவக் கல்வி நிகழ்ச்சி ராயல் ஃபோரம் அரங்கில் நடைபெற்றது.ராயல் கேர் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் க.மாதேஸ்வரன் தலைமை வகித்து பயிற்சி பட்டறை முகாமை துவக்கி வைத்து பேசினார்.



அப்போது பேசிய அவர்,இதய நோய் பாதிப்பால் வரும் நோயாளிகளின் நோய் பாதிப்பை கண்டறிந்து விரைவாக செயல்படும், மருத்துவர்களின் அவசர சிகிச்சைத் திறனை மேம்படுத்தவும்,இதய அவசர நிலைகளில் உயிரிழப்புகளைக் குறைக்கும் வகையில் நவீன சிகிச்சை அணுகுமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவும் இந்தப் பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறிப்பாக மாரடைப்பு,இதயத் துடிப்பு சீரற்ற நிலை,இதயத் தடுப்பு மற்றும் பெருநாடி சார்ந்த அவசர பாதிப்புகளைக் கையாளும் முறைகள் குறித்து அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் பயிற்சி வழங்க இருப்பதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக நடைபெற்ற துவக்க விழாவில் இந்திய அவசர மருத்துவச் சங்கத்தின் தலைவர் டாக்டர் ஸ்ரீநாத்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயிலரங்கத்தை துவக்கி வைத்து பேசினார்.

அப்போது பேசிய அவர்,இதய அவசர சிகிச்சையின் போது நோயாளிகளின் பாதிப்புகளை விரைவாகக் கண்டறிந்து,உரிய சிகிச்சைகளை உடனடியாக வழங்குவதன் அவசியம் குறித்து விளக்கமளித்தார்.

தொடர்ந்து நடைபெற்ற பயிலரங்கில் இளம் வயதினருக்கு ஏற்படும் மாரடைப்பு,இதயத் துடிப்பில் ஏற்படும் மாற்றங்கள், உயர் ரத்த அழுத்தத்தால் ஏற்படும் அவசர நிலைகள் மற்றும் நுரையீரல் ரத்தக் குழாயில் ரத்தம் அடைத் தல் போன்ற பாதிப்புகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வழிமுறைகள் குறித்து மருத்துவர்கள் மற்றும் துறை சார்ந்த நபுணர்களுக்கு பயிற்சி அமர்வுகள் நடைபெற்றன.

அவசர சிகிச்சைப் பிரிவில் உயிரைக் காக்கும் சிகிச்சை முறைகள்,இதயத் தடுப்பு ஏற்படும் நேரத்தில் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள் மற்றும் நோயாளிகளைப் பாதுகாப்பாகக் கையாள்வது குறித்தும் மருத்துவக் கருத்துகள் பகிரப்பட்டன.

மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு சார்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை,மருத்துவர்கள் கண்ணன் தங்கவேலு, திவ்யா,கமலகண்ணன்,ராஜ் விஷ்ணு, அகிலன்,இளவரசன் மற்றும் ராயல் கேர் மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் டாக்டர் நி. பரந்தாமன்,தலைமைச் செயல்பாட்டு அலுவலர் டாக்டர் ரி.ஜி. மணிசெந்தில்குமார்,மார்க்கெட்டிங் பிரிவு சீனியர் பொது மேலாளர் வி.வெங்கடேசன் ஆகியோர் செய்திருந்தனர்.

# தென்பெண்ணை ஆற்றை மீட்க தொடர் போராட்டம் தமிழக வாழ்வுரிமைக் கட்சி அறிவிப்பு!



கிருஷ்ணகிரி. அக்.13–

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அடுத்த கந்திகுப்பத்தில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சுற்றுச்சூழல் அணி சார்பில் தென்பெண்ணை ஆற்றை மீட்பது தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் சுற்றுச்சூழல் அணியின் மாநிலச் செயலாளர் ஐயப்பன் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசுகையில், பெங்களூருவில் இருந்து வெளியேறும் கழிவுகளால் தென்பெண்ணை ஆறு மாசடைந்து, நிலத்தடி நீரும் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்தார். மேலும், கெலவரப்பள்ளி அணை மற்றும் கிருஷ்ணகிரி அணையில் லட்சக்கணக்கான மீன்கள் செத்து மிதக்கும் நிலை ஆண்டுதோறும் தொடர்வதாகவும், இதற்குத் நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் கூறினார்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் அறிவுறுத்தலின் படி, தென்பெண்ணை ஆற்றை மீட்கத் தொடர் போராட்டங்களும் கவனஈர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மண்டலச் செயலாளர் மு. நெப்போலியன் பேசுகையில், தண்ணீர் மற்றும் நிலவளத்தைப் பாதுகாக்கக் கட்சி சார்பில் குழு அமைக்கப்பட உள்ளதாகவும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஆறு தொகுதிகளுக்கும் ஆறு மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். சுங்கச்சாவடிகளுக்கு எதிராக அனைத்து மாவட்டங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் கூறினார்.

மேலும், ஓசூரில் நடைபெறும் குற்றச் சம்பவங்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், போச்சம்பள்ளி சிப்காட் பகுதியைச் சுற்றி நிலத்தடி நீர் மாசடைந்துள்ளதால் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தமிழக வாழ்வுரிமைக் கட்சி முன்னெடுக்கும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிக்கு மண்டலச் செயலாளர் மு. நெப்போலியன் வரவேற்புரை வழங்கினார். சுற்றுச்சூழல் அணியின் மாநிலச் செயலாளர் ஐயப்பன் தலைமை வகித்தார். மாரிமுத்து, இலக்கியா, மதுபாலா ஆகியோர் சிறப்புரையாற்றினர். டி.சி. தவமணி, அருண், அமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக தர்மபுரி, விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மாவட்டப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பாளர்கள் ஜி.எஸ். சாகுல், சரவணன், சரவணன், தங்கவேல், மீனா, சக்தி, ராஜேஷ், கண்ணன், சேகர், கார்த்தி, சினிமாஸ், மல்லிகார்ஜுன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகரப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக ஆழ்வார் பிரான்சிஸ் சேவியர் நன்றி கூறினார்.

# UPI பரிவர்த்தனைக் கட்டணத்திற்கு எதிராக ஈரோடு மாவட்டம் முழுவதும் வணிகர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்!

ஈரோடு. அக். 13

ஒன்றிய அரசின் கட்டண விதிப்பு முடிவைத் திரும்பப் பெற வலியுறுத்தி ஒருநாள் பணமில்லா பரிவர்த்தனை புறக்கணிப்புப் போராட்டம்

UPI பணப்பரிவர்த்தனைகளுக்குக் கட்டணம் விதிக்கும் முடிவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வலியுறுத்தி, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் இன்று தமிழகம் முழுவதும் ஒருநாள் பணமில்லா பரிவர்த்தனை புறக்கணிப்புப் போராட்டம் நடைபெற்றது.




பேரமைப்பின் மாநிலத் தலைவர் . A.M. விக்கிரமராஜா அவர்களின் அறிவுறுத்தலின்படி நடைபெற்ற இப்போராட்டத்தின் ஒரு பகுதியாக, ஈரோட்டில் மாவட்டத் தலைவர் இரா.க. சண்முகவேல் தலைமையில், ஈரோடு மாவட்டப் பேரமைப்பு அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டப் பொருளாளர் உதயம் பொ. செல்வம், கோவை மண்டல இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் SKM.பாலகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ. லாரன்ஸ் ரமேஷ், மாவட்டத் துணைத் தலைவர் நெல்லை A.ராஜா, மாவட்டத் துணைச் செயலாளர் த.A.ஆனந்தன், மாவட்டச் செய்தித் தொடர்பாளர் A.R. சாதிக் பாட்சா, மாநகர செயலாளர் கே.பாலமுருகன், மாநகர பொருளாளர் T.கமலஹாசன் உள்ளிட்ட மாவட்ட மற்றும் மாநகர நிர்வாகிகள், மாநகரில் உள்ள இணைப்புச் சங்கங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வணிகர்களின் எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடை பெற்றன.

காளிங்கராயன் பாளையத்தில் மாவட்டச் செயலாளர் வேலா பசா.சுந்தரராஜன் தலைமையிலும், நசியனூரில் மாநில துணைத் தலைவர் ப.திருமூர்த்தி தலைமையிலும், பவானிசாகரில் சத்தி வட்டாரத் தலைவர் . B.S. நாகமையன் தலைமையிலும், கோபி தினசரி மார்க்கெட் சங்கத் தலைவர் சிவா தலைமையிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

அதேபோல், பள்ளிபாளையம் பிரிவில் குமாரபாளையம் அனைத்து வணிகர்கள் சங்கத் தலைவர் K. காமராஜ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டங்களின் மூலம் UPI பரிவர்த்தனைகளுக்குக் கட்டணம் விதிப்பதால் சிறு, குறு வணிகர்களுக்கு ஏற்படக்கூடிய கூடுதல் செலவினங்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பொருளாதாரச் சுமைகள் குறித்து வணிகர்களுக்கும் பொதுமக்களுக்கும் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், வணிகர்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் சட்டைப்பைகளில் எதிர்ப்பு வாசகங்கள் அச்சிடப்பட்ட கருப்பு பேட்ஜ்களை அணிந்தும், தங்களது கடைகளில் எதிர்ப்பு வாசகங்கள் கொண்ட சுவரொட்டிகளை ஒட்டியும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள் எளிமையாகவும், வணிகர்களுக்கும் பொது மக்களுக்கும் கூடுதல் செலவுச் சுமையை ஏற்படுத்தாத வகையிலும் தொடர வேண்டும் என்றும், UPI பரிவர்த்தனைகளுக்குக் கட்டணம் விதிக்கும் முடிவை ஒன்றிய அரசு மறுபரிசீலனை செய்து திரும்பப் பெற வேண்டும் என்றும் இப்போராட்டத்தின் வாயிலாக வலியுறுத்தப்பட்டது.

# தேவபாண்டலத்தில் பேறறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா மற்றும் மாணவர்களுக்குப் பாராட்டு விழா!



சங்கராபுரம் அக் 13

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், தேவபாண்டலத்தில் கார்குழலி கல்வி மற்றும் சமூகசேவை அறக்கட்டளை சார்பிலும், அதன் இணை அமைப்பான கார்குழலி தமிழ்ச் சங்கம் சார்பிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்தநாள் விழா, வீரபாண்டிய கட்டபொம்மனின் 157 வது பிறந்தநாள் விழா மற்றும் 2025–2026 கல்வியாண்டில் நடைபெற்ற 10 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தமிழ்ப் பாடத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்குத் தொழிலதிபர் ஆறு. கதிரவன் தலைமை தாங்கினார். தொழிலதிபர் ந. பன்னீர்செல்வம், வ.உ.சி. மக்கள் இயக்கத்தின் மாவட்டச் செயலாளர், கார்குழலி கல்வி அறக்கட்டளை இயக்குநர் தா.வசந்தா ஆகியோர் முன்னிலை வகித்தனர். குறிஞ்சி தமிழ்ச்சங்கச் செயலாளர் கவிஞர் கோ.சக்திவேல் வரவேற்புரை ஆற்றினார். அனைத்து வியாபாரிகள் சங்கச் செயலாளர் கோ.குசேலன் தொகுப்புரை வழங்கினார். திருவள்ளுவர் தமிழ்ச்சங்கத்தைச் சேர்ந்த தமிழ்ச்செம்மல் சண்முகபிச்சப்பிள்ளை தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார்.

அரசுப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வளரும் சுடர் விருது வழங்கப்பட்டது. கலால் மற்றும் சுங்கத்துறையின் உதவி ஆணையர் (ப.நி.) பாவலர் சு. சண்முகசுந்தரம் வாழ்த்துரை வழங்கினார். அ. பாண்டலம் ஊராட்சி மன்றத் தலைவர் பாப்பாத்தி நடராஜன் கலந்து கொண்டார்.

அனைத்துப் பொதுச்சேவை கூட்டமைப்புகளின் ஒருங்கிணைப்பாளர் இராம. முத்துகருப்பன், சின்னசேலத்தைச் சேர்ந்த குருதிக் கொடையாளரான A.S.M.P. பரமசிவம் அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்.

இவ்விழாவில் மாவட்ட அரிமா சங்கத் தலைவர் அரிமா க.வேலு, பெரிய சிறுவத்தூர் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி நல்லாசிரியர் விருதாளர் ப.வேல்முருகன், ஜெய் பிரதர்ஸ் நிறுவனர் வ.விஜயகுமார், இன்னர்வீல் கிளப் தலைவி M.கீதாமுருகன், வாசவி கிளப் மாவட்ட செயலாளர் தீபா சுகுமார், புதுப்பட்டு அங்கன்வாடிப் பணியாளர் V.செந்தில்குமாரி, ரோட்டரி மாவட்ட துணை ஆளுநர் Rtn. N. சுதாகரன், மோட்டாம்பட்டி கிராம செவிலியர் N.சுமதி, குறிஞ்சி தமிழ்ச்சங்கத் தலைவர் துரை. செல்வமணி, ட்ரம்ஸ் கலைஞர் ப. பிரசாந்த்வர்மா, ரங்கோலி புகழ் செல்வி ம. ஹாசினி, புதுபாலப்பட்டு S.P. ராஜா, பந்தல் அமைப்பாளர், தேவபாண்டலம், கவிஞர் Dr. J. சிபிராஜ், சௌந்திர வல்லிபாளையம், C. சீனுவாசன்–கவிதா, கிடங்குடையாம்பட்டு மற்றும் அரிமா S.P.R. செல்வமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழாவின் நிறைவில், கார்குழலி அறக்கட்டளையின் நிறுவனர் இராசு.தாமோதரன் நன்றி கூறினார்.

# கோவை மாவட்டத்தில் போதைப்பொருட்களுக்கு எதிராக 228 இடங்களில் காவல்துறையினர் அதிரடி சோதனை 480 காவல்துறையினர் பங்கேற்பு - 14 பேர் கைது - 7.702 கிலோ கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் பறிமுதல்!

கோவை. அக்.13=

கோவை மாவட்டத்தில் கஞ்சா,போதைப்பொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்களின் சட்டவிரோத விற்பனை,பதுக்கல் மற்றும் கடத்தலை முற்றிலும் தடுக்கும் நோக்கில்,கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பவன்ரி. ரெட்டி, உத்தரவின்பேரில் மாவட்டம் முழுவதும் தீவிர கண்காணிப்பு மற்றும் சட்ட அமலாக்க நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



இதன் ஒரு பகுதியாக, கருமத்தம்பட்டி மற்றும் பேரூர் உட்கோட்டங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் காவல்துறையினர் சிறப்பு அதிரடி சோதனைகளை மேற்கொண்டனர்.

குறிப்பாக,கஞ்சா மற்றும் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் தொடர்பான குற்றங்களில் ஏற்கனவே ஈடுபட்ட நபர்கள்,காவல்துறையினரால் தேடப்பட்டு வரும் குற்றவாளிகள் மற்றும் உளவுத்தகவல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட சந்தேகத்திற்கிடமான நபர்களைக் குறிவைத்து இச்சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், கல்லூரிப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு சொந்த ஊர்களுக்குத் திரும்பாமல் வாடகை வீடுகள் மற்றும் அறைகளில் தங்கியுள்ள சந்தேகத்திற்கிடமான நபர்கள் குறித்தும் தகவல்கள் சேகரிக்கப் பட்டன. அவற்றின் அடிப் படையில், குற்றச்செயல்கள் நடைபெற வாய்ப்புள்ளதாகக் கண்டறியப்பட்ட இடங்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான பகுதிகள் தீவிர சோதனைக்காக அடையாளம் காணப்பட்டன.

அதன்படி, கருமத்தம்பட்டி உட்கோட்டத்திற்குட்பட்ட கோவில்பாளையம் மற்றும் செட்டிபாளையம் காவல் நிலைய எல்லைகளில் 132 இடங் களும், பேரூர் உட்கோட்டத் திற்குட்பட்ட மதுக்கரை மற்றும் கே.ஜி. சாவடி காவல் நிலைய எல்லைகளில் 96 இடங்களும் என மொத்தம் 228 இடங்களில் ஒரே நேரத்தில் அதிரடி சோதனைகள் மேற்கொள்ளப் பட்டன.

இச்சிறப்பு நடவடிக்கையானது பேரூர் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. சுரேஷ் மற்றும் கருமத்தம்பட்டி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. கரிகால் பாரி ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் மேற்கொள்ளப் பட்டது.

இதற்காக, கருமத்தம்பட்டி உட்கோட்டத்தில் 42 தனிப்படைகளும், பேரூர் உட்கோட்டத்தில் 30 தனிப்படைகளும் என மொத்தம் 72 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, சுமார் 480 காவல்துறையினர் ஒரே நேரத்தில் 228 இடங்களில் நடைபெற்ற தீவிர சோதனைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இச்சிறப்பு அதிரடி சோதனையின் மூலம், கஞ்சா மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் தொடர்பாக மொத்தம் 10 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவற்றில் தொடர்புடைய 12 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், காவல்துறையினரால் ஏற்கனவே தேடப்பட்டு வந்த 2 தலைமறைவுக் குற்றவாளிகளும் இச்சோதனையின் போது கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் மொத்தம் 14 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் சோதனையின் போது கஞ்சா–7கிலோ 702கிராம், மெத்தாம் பெட்டமைன் போதைப் பொருள்–2 கிராம், மாத்திரைகள்–1,000 எண்ணிக்கை, தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள்– 45 கிலோ,செல்போன்கள் 5 எண்ணிக்கை,இருசக்கர வாகனங்கள் 16,அரிவாள்கள் 2,பணம் ரூ.15,000/ ஆகியவை கைப்பற்றப்பட்டன.

மேற்கண்ட சோதனைகளில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள்,தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், வாகனங்கள், ஆயுதங்கள் மற்றும் இதர பொருட்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களில் சட்டப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.மேலும் கைது செய்யப்பட்ட 14 எதிரிகளையும் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தி நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# சமூக வளைதங்களில் ரீல்ஸ் வீடியோ பதிவிடும் இஸ்லாமிய பெண்களை ஜமாத்தாரர்கள் கட்டு படுத்த வேண்டும்
## காயல் அப்பாஸ் வேண்டுகோள்




காயல் பட்டிணம் :அக்13

சமூக வளைதங்களில் ரீல்ஸ் வீடியோ பதிவிடும் இஸ்லாமிய பெண்களை அப்பகுதியின் ஜமாத் தாரர்கள் கட்டு படுத்த வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் வேண்டு கோளை விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தென்காசி மாவட்டம், கடையநல்லுரை சேர்ந்த வஹிதா என்ற பெண் தன்னை திருமணம் செய்து கொள்வதாக கூறி முத்துக்குமரன் என்பவர் ஏமாற்றி விட்டதாகவும் முத்துக் குமரன் விவகாரத்துடன் தற்கொலை பண்ணுவதாக கூறி மது மற்றும் சிகரட் பிடிப்பது போன்ற வீடியோ காட்சிகள் வெளியாகி இஸ்லாமியர்கள் மத்தியில் பெரும் பரப்பை ஏற்படுத்தி வருகிறது.

மேலும், தமிழகத்தில் இஸ்லாமிய பெண்கள் பலரும் சமூக வளைதங்களில் டான்ஸ் பாடல்களை பாடுவது போல் பல்வேறு ரீல்ஸ் வீடியோக்கள் வெளியிட்டு அதன் மூலம் பேமஸ் ஆகனும் அதிலிருந்து வருமானத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தோடு இத்தகை செயலை செய்து வருகின்றனர்.

மேலும். இஸ்லாமிய அடையாளமான ஹீஜாப்பை அணிந்து ரீல்ஸ் வீடியோக்களை வெளியிடுகிறோமே இதனால் உறவினர்கள் மற்றும் ஜமாத்தார்கள் நாம் செய்யும் செயலை தவறாகநினைப்பார்களே என்று கொஞ்சம் கூட உணராமல் ரீல்ஸ் வீடியோ மோகத்தால் இஸ்லாமிய மார்க்கத்தின் நெறி முறைகளை முறையாக கடை பிடிக்காத இஸ்லாமிய பெண்களின் வாழ்க்கை கேள்வி குறியாக மாறி வருவது மிகுந்த வேதனை அளிக்கிறது.

எனவே : இஸ்லாமிய மார்க்கத்தில் மது ,புகை பழக்கம் ஹராமான செயல்,அப்படி இருக்க இஸ்லாமிய பெண்ணாக இருக்க கூடிய வஹீதா மது, சிகெரட் பிடிப்பது இஸ்லாமிய மார்க்கத் திற்கு எதிரான செயல் இத்தகை செயலை ஒரு போதும் ஏற்று கொள்ள முடியாது. மேலும். வஹீதாவுக்கு ஆதரவாக இஸ்லாமியர்கள் யாரும் பேசவோ ,குரல் கொடுக்க வேண்டாம் என தாழ்மையுடன் கேட்டு கொள்கிறோம்.

ஆகவே, சமூக வளைதங்களில் ரீல்ஸ் வீடியோ பதிவிடும் இஸ்லாமிய பெண்களை கண்டறிந்து அப்பகுதி யின் ஜமாத் தாரர்கள், மற்றும் உறவினர்கள் மூலம் அறிவுரைகளை வழங்கி கட்டு படுத்துனால் மட்டுமே இனி வரும் காலங்களில் இஸ்லாமிய பெண்கள் வழி தவறாமலும்,பாதிக்க படாமலும்,பாதுகாக்க முடியும் என்பதை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பாக தெரி வித்து கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி பெற்று குறைகள் கேட்டறிந்தார்.



சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 23 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.39.76 லட்சம் மதிப்பிலான செயற்கை கால் அவயங்களை வழங்கினார்கள். உடன் மாற்றுத்திறனாளிகள் மாநில ஆணையரக உதவி இயக்குனர் பாலாஜி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி, தேசிய சட்ட பல்கலைக்கழக உச்சநீதிமன்ற ஆய்வுக்குழு நிபுணர்கள் செல்வி சோனியா, செல்வி எலிசபெத் ஆகியோர் உள்ளனர்.

# கோவை "கார்ஸ் 327" நிறுவனம் சார்பில் யூஸ்டு கார்கள், 2வது விற்பனை மாநாடு பொதுமக்களிடையே பெரும் வரவேற்பு.



கோவை அக்:13

கோவையில் யூஸ்டு கார் வாங்க திட்டமிடுபவர்களுக்கு பயனளிக்கும் வகையில்,500"க்கும் மேற்பட்ட பயன்படுத்தப்பட்ட கார்கள் ஒரே இடத்தில் இடம்பெறும் 11வது மாபெரும் Used Cars மாநாடு நடைபெற உள்ளது.

"CARS327" நிறுவனத்தின் சார்பில் வருகின்ற நவராத்திரி ,ஆயுத பூஜை மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, யூஸ்டு கார்கள் 2 வது மாநாடு, விற்பனை திருவிழா அக் 9 முதல் 18 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

காலை 9.30 மணி முதல் இரவு 8 மணி வரை,கோவை பட்டணம் பகுதியில் உள்ள L&T Bypassல் அமைந்துள்ள "CARS327" வளாகத்தில் இந்த மாநாடு நடை பெறுகிறது.

பல்வேறு வகையான பயன்படுத்தப்பட்ட கார்களை ஒரே இடத்தில் பார்வையிட்டு,தங்களது தேவைக்கும் பட்ஜெட்டுக்கும் ஏற்ற காரை தேர்வு செய்யும் வாய்ப்பு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும் கார்களை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு பரிசுகள், Assured Gifts மற்றும் சிறப்பு Service Offers உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்துடன் நேரில் சென்று கார்களை பார்வையிட்டு,விலை மற்றும் வசதிகளை ஒப்பிட்டு,தங்களுக்கு ஏற்ற காரை தேர்வு செய்ய இது ஒரு வாய்ப்பாக அமையும் என கார்ஸ் 327 நிறுவனர் விஷ்ணு வேணுகோபால் தெரிவித்தார்.

மேலும் விவரங்களுக்கு 86819 66699,89404 66699,84287 66699 அல்லது 89407 66699 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

# ஆர்.கே.பேட்டை வட்டத்தில் வரும் 21 ம் தேதி "உங்களை தேடி உங்கள் ஊரில்" முகாம்
## மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தகவல்

திருவள்ளூர் அக் 13 : திருவள்ளூர் மாவட்டம். ஆர்.கே.பேட்டை வட்டத்தில் 21.10.2026 புதன்கிழமை அன்று காலை "உங்களை தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தலைமையில் ஆர்.கே.பேட்டை வட்டத்தில் அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து திட்ட பணிகளையும் ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

இந்த முகாமில் அனைத்து துறை சார்ந்த. மாவட்ட அளவிலான முதல்நிலை அலுவலர்கள் பங்கேற்க உள்ளார்கள். பொதுமக்கள் தங்களது குறைகள் மற்றும் கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மனுக்களாக அளிக்கலாம். இந்த வாய்ப்பை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.

# மத்தூர் அருகே இரும்பு பைப் விழுந்து இளைஞர் பலி

மத்தூர், அக். 13

கிருஷ்ணகிரி மாவட்டம் மததூர் அருகே உள்ள கிருஷ்ணாபுரம் பகுதியைச் சேர்ந்த சென்னப்பன் என்பவருடைய மகன் பெருமாள் (31). இவர் வீடுகளுக்கு சோலார் இணைப்பு வழங்கும் தொழில் செய்து வந்துள்ளார். நேற்று நடுபட்டு அரசு மேல்நிலைப்பள்ளி அருகே சாலையோரம் இருந்த இரும்புத்தூணை ஜேசிபி எந்திரம் மூலம் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்ததாக கூறப்படுகிறது.



அப்போது பெருமாள் மத்தூரில் இருந்து இருசக்கர வாகனத்தில் கிருஷ்ணாபுரம் பகுதிக்கு சென்று கொண்டு இருந்த போது, திடீரென ஜேசிபி எந்திரம் மூலம் அகற்றப்பட்ட இரும்புத்தூண் பெருமாளின் தலையின் மீது விழுந்ததில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விடுகின்றார்.

இதுகுறித்து அதிர்ச்சியடைந்த அக்கம் பக்கத்தினர் மத்தூர் போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கின்றனர். தகவலின் பேரில் போலீசார் விரைந்து சென்று இரும்புத்தூண் தலையின் மீது விழுந்து இறந்த பெருமாளின் உடலை கைப்பற்றி, கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டு, வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# 'வெற்றிப்பயணம்' திட்டத்தை ரத்து செய்யக் கோரி பெரம்பலூரில் பேரணி.!!




பெரம்பலூர்: அக்.13–

தமிழகத்தில் தவெக அரசு பெண்களுக்காக அறிவித்துள்ள 'வெற்றிப் பயணம்' இலவசப் பேருந்து திட்டத்தை ரத்து செய்யக் கோரி பெரம்பலூரில் தனியார் பேருந்து ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசுப் பேருந்துகளில் ஏற்கனவே சரியான் முறையில் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்ட மகளிர் விடியல் பயணம் தற்போது வெற்றிப் பயணம் என்ற பெயரில் முறையாக திட்டமிடப் படாமல் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனால் தனியார் பேருந்துகளுக்கு பயணிகள் வருவது கடுமையாகக் குறைந்துள்ளது. தனியார் பேருந்துத் தொழில் இதனால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களின் வருமானம் மிகவும் குறைந்துள்ளதாக கூறப்படுகிறது. மேலும் ஆட்டோ ஓட்டுனர்களின் வாழ்வாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக பரவலாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்தசூழலில் மேற்கண்ட பிரச்சனைகளை உறுதிப்படுத்தும் விதமாக, 250க்கும் மேற்பட்ட தனியார் பேருந்து ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள் பேரணியாகச் சென்று பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். அந்த மனுவில் தவெக அரசின் வெற்றி பயண திட்டத்தால் தங்கள் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு உள்ளனர். பேரணியில் பங்கேற்றவர்கள் "யாருக்கும் இலவசம் வேண்டாம்", "காப்பாற்று காப்பாற்று எங்கள் வாழ்வாதாரத்தை காப்பாற்று", "வெற்றிப்பயணம் திட்டத்தை ரத்து செய்" என்பது போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கைகளில் ஏந்தி, தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டு சென்றனர்.

# டாஸ்மாக் ரிவர்ஸ் வெண்டிங் மெஷின் டெண்டர் மீது இறுதி முடிவு எடுக்கக்கூடாது என தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை: டாஸ்மாக் மதுபாட்டில்களை திரும்பப் பெற, ரிவர்ஸ் வெண்டிங் மெஷின் நிறுவும் டெண்டரை எதிர்த்து பாட்டில் வியாபாரிகள் நலச்சங்கம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் நீதிபதி என்.செந்தில்குமார் டெண்டர் மீது இறுதி முடிவு எடுக்கக்கூடாது என தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளார்.மேலும், டெண்டரில் எத்தனை பேர் பங்கேற்றனர் என அறிக்கை தாக்கல் செய்யவும் தமிழக அரசுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# சேலத்தில் பயங்கரம் கணவனை அடித்துக் கொன்று உடலைக் காட்டுக்குள் புதைத்த மனைவி,மகன்.

சேலம். அக்.13–

சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் அருகே குடும்பத் தகராறு காரணமாகக் கூலித் தொழிலாளியை அடித்துக் கொன்று, அவரது உடலைக் காட்டுப் பகுதியில் புதைத்த மனைவி மற்றும் மகன் உள்பட 4 பேரை காவல்துறையினர் அதிரடியாகக் கைது செய்துள்ளனர்.

சேலம் மாவட்டம் நெய்யமலை கிராமத்தைச் சேர்ந்தவர் கோவிந்தராஜ் (44). இவருக்கும் இவரது மனைவி பழனியம்மாள் (40) என்பவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறில், பழனியம்மாள் தனது மகன் முருகனுடன் (21) தாய் வீட்டிற்குச் சென்றுவிட்டார். இதற்கிடையே மாமனார் மாணிக்கத்துடன் ஏற்பட்ட மோதலில் கோவிந்தராஜ் நாட்டுத் துப்பாக்கியால் சுட்ட வழக்கில் கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் வெளியே வந்து வாழப்பாடி பகுதியில் தங்கி வேலை செய்து வந்தார்.

சமீபத்தில் தனது மனைவி மற்றும் மகனை அழைக்கச் சென்றபோது ஏற்பட்ட தகராறில், பழனியம்மாள், அவரது மகன் முருகன், தந்தை மாணிக்கம் (65) மற்றும் சகோதரர் பெரியசாமி (39) ஆகிய 4 பேரும் சேர்ந்து கோவிந்தராஜைச் சரமாரியாகத் தாக்கியுள்ளனர். இதில் தலையில் பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதனால் பீதியடைந்த அந்த 4 பேரும் சேர்ந்து கோவிந்தராஜின் உடலை அருகிலுள்ள நெய்யமலை வனப்பகுதிக்குக் கொண்டு சென்று ரகசியமாகப் புதைத்துவிட்டுத் தலைமறைவாகினர்.

கோவிந்தராஜ் வேலைக்கு வராததால் சந்தேகம் அடைந்த தோட்ட உரிமையாளர் அளித்த புகாரின் அடிப்படையில் ஏத்தாப்பூர் காவல்துறையினர் விசாரணை நடத்தினர். விசாரணையில் இக்கொலை வெளிச்சத்திற்கு வந்தது. இதனையடுத்து 4 பேரையும் கைது செய்த காவல்துறையினர், அவர்கள் காட்டிய இடத்திலிருந்து கோவிந்தராஜின் உடலைத் தோண்டி எடுத்துப் பிரேதப் பரிசோதனைக்குப் பின் உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

# வடபழனி மெட்ரோ ரயில் நிலையங்களை இணைக்கும் ஸ்கைவாக்! ரூ.8.12 கோடி மதிப்பீட்டில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அமைப்பு!

சென்னை: அக்.13=

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்ட வழித்தடத்தில் உள்ள வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தையும், இரண்டாம் கட்டத் திட்டத்தின் கீழ் பூந்தமல்லி – போரூர் – வடபழனி வழித்தடத்தையும் இணைக்கும் வகையில், சுமார் ரூ.8.12 கோடி மதிப்பீட்டில் பிரத்யேக ஸ்கைவாக் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தால் அமைக்கப் பட்டுள்ள இந்த ஸ்கைவாக், இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் சேவை தொடங்கியுள்ள நிலையில், பயணிகள் ஒரு வழித்தடத்தில் இருந்து மற்றொரு வழித்தடத்திற்கு எளிதாக மாறிச் செல்லும் வகையில் முக்கிய இணைப்புப் பாலமாக அமைகிறது.

நேற்று பூந்தமல்லி – போரூர் இடையேயான இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத் தின் மஞ்சள் வழித்தடச் சேவையைப் பிரதமர் நரேந்திர மோடி பொதுமக்கள் பயன் பாட்டிற்காகத் தொடங்கி வைத்தார். இதையடுத்து, பூந்தமல்லி மற்றும் வடபழனி இடையேயான மெட்ரோ ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு இந்த ஸ்கைவாக் கூடுதல் வசதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஸ்கைவாக் மூலம் வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் இறங்கும் பயணிகள், சாலையில் இறங்கி போக்குவரத்து நெரிசலைக் கடக்கவேண்டிய அவசியமின்றி, மற்றொரு வழித்தடத்திற்குச் செல்ல முடியும். மேலும், கட்டணக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்தபடியே ஒரு வழித்தடத்தில் இருந்து மற்றொரு வழித்தடத்திற்கு மாறிச் செல்லும் வகையில் இந்த வசதி வடிவமைக்கப் பட்டுள்ளது. இதனால், பயணிகள் கூடுதலாக டிக்கெட் எடுக்க வேண்டிய தேவையும் தவிர்க்கப்படுகிறது.

மேலும், வடபழனி சந்திப்பில் பாதசாரிகள் சாலையைக் கடக்கும்போது ஏற்படும் சிரமங்களைக் குறைத்து, பாதுகாப்பான முறையில் மெட்ரோ ரயில் நிலையங்களைச் சென்றடைய இந்த ஸ்கைவாக் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதிலும், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவோருக்கு வசதியான பயண அனுபவத்தை வழங்குவதிலும் இதுபோன்ற இணைப்பு வசதிகள் முக்கியப் பங்கு வகிக்கும் எனக் கருதப்படுகிறது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421, 9750589992